Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 22/March/2023 IJRAW: 2023; 2(4):135-140 Accepted: 30/April/2023

# திருக்குறள்-திருவிவிலியம் உணர்த்தும் ஈதல்

*[1]ந.ஆ. வேளாங்கண்ணி

*[1]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Abstract**

மனிதன் உயிர் வாழ உணவு, உடை, உறைவிடம் போன்றவை அடிப்படையாகவும் இன்றியமையாதவையாகவும் கருதப்படுகின்றன. யாருக்கு இவை குறைபடுகின்றனவோ அவர்களுக்கு ஈதல் வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. காரணம் அடிப்படைத் தேவைகள் இல்லாமல் இவ்வையகத்தில் வாழ்க்கையை நகர்த்த முடியாது என்பதை உணர்த்தத் திருக்குறளும் திருவிவிலியமும் ஈதல் என்ற விழுமியம் குறித்துப் பேசுகின்றன. ஈதல் என்ற ஒற்றைச் சொல் மனித உயிர்களிடம் எவ்வாறு இருந்தது? எந்த அளவிற்கு இருந்தது? தற்போது எப்படி இருக்கிறது? என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords:** ஈதல், ஈகை, கொடை, கொடுத்தல், பகிர்வு, தானம், தர்மம்

## முன்னுரை

சங்ககாலம் தொடங்கி சமகாலம்வரையிலான தமிழிலக்கியங்கள் ஈகைப்பண்பைக் காலங்காலமாகத் தனித்து அடையாளப்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஈகை என்ற சொல்லிற்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள் கடையேழு வள்ளல்கள் ஆவர். சிறுபாணாற்றுப்படை நூல் கடையேழுவள்ளல்களின் சிறப்புகளைப் பட்டியலிடுகின்றது.

பாரியும் அவரது தேரோட்டியும் தேரில் போகும் வழியில் முல்லைக்கொடி வாடி, படர்வதற்கு வழியின்றி இருந்ததைக் கண்டனர். அப்போது பாரி, தான் பயணித்தத் தேரின் மேல் முல்லைக்கொடியைப் படரவிட்டுத் தானும் தமது தேரோட்டியும் பறம்புமலைக்கு நடந்தே சென்றனர். இச்செய்தியைத் தேரோட்டி அவ்வூர் மக்களிடம் கூறினார். அன்றிலிருந்துதான் முல்லைக்குத் தேர் ஈந்தவர் பாரி என்று பெயர் வந்தது. அந்த அளவிற்குப் பாரி இயற்கையிடம் இளகிய மனம் கொண்டவராக இருந்தார் என்பதை அறியமுடிகிறது.

மழை வளம் மிக்கப் பழனி மலைக்குத் தலைவனாக இருந்தவர் பேகன். இம் மலையில் மழை வந்ததும் காட்டில் மயில்கள் ஆடிக்கொண்டு இருக்கும். ஒரு நாள் மயில் ஒன்று மழையில் நனைந்து குளிரினால் நடுங்குகிறதென்று அறிந்த பேகன் தான் போர்த்தியிருந்த போர்வையை அம்மயிலுக்குப் போர்த்திவிட்டு வந்தார். மயில் அப்போர்வையைப் பயன் படுத்திக் கொள்ளுமா? கொள்ளாதா? என்று சற்றும் யோசிக்காமல் இதைச் செய்தார். இதனால் இவரது செயலைக் கண்ட மக்கள் கொடைமடம் கொண்டவர் என அழைத்தனர் என்பதைக் காணமுடிகிறது.

அதியமான் தகடூரைத் தலைநகராகக் கொண்ட கொல்லி மலையின் குறு நிலத் தலைவன். இவர் ஒரு நாள் மலை உச்சியில் விளைந்திருந்த அருநெல்லி மரத்தின் அருங்கனி ஒன்றைப் பெற்றார். அக்கனியை உண்டால் நரை, திரை, மூப்பு இன்றி நீண்ட நாள் வாழ முடியும். ஆனாலும் அக்கனியை அவர் உண்ணாமல் தம்மைக் காணவந்த ஔவைப்பாட்டிக்குக் கொடுத்தார்.

இவ்வாறு வாழ்ந்தவர்களின் மண்ணில் வாழ்கின்ற நமக்கு இன்று கைகளும் மனமும் சுருங்கிவிட்டன. காரணம் தனக்கென வாழ்வதும் பதுக்கலும் தனதாகிவிட்டன. ஈதல்

*Corresponding Author: ந.ஆ. வேளாங்கண்ணி

என்னும் அறப்பண்பு மெல்ல மெல்ல குறைந்த காரணத்தினால் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் நிலைக்குப் பலர் தள்ளப்பட்டனர் என்பதை அறியமுடிகிறது. இந்நிலை மென்மேலும் தொடராமல் இருக்கத் திருக்குறளும் திருவிவிலியமும் மனிதனுக்கு ஈதல் என்னும் அறப்பண்பு தேவை என்கிறது. ஆகவே, ஈகை என்றால் என்ன? எதை ஈதல் வேண்டும்? யாருக்கு ஈய வேண்டும்? ஈய மறத்தலின் நிலை என்ன? ஈதலின் பலன் என்ன? என்று ஈத்துவக்கும் இன்பத்தின் பெருமையை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளதை ஆய்வுத் தேடலாகக் காணமுடிகிறது.

### ஈதல் என்பது யாதெனில் யாருக்கு

திருக்குறளுக்குக்கான உரையில் ஈகையைப்பற்றிக் குறிப்பிடுகையில் “இல்லையென யாசித்து வந்தவர் அனைவருக்கும் நிற்காது கொடுத்துக்கொண்டே இருப்பது” [1] எனக் குறிப்பிட்டவர் மணக்குடவர். “வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை” [2] வறுமையில் வாடுபவருக்கு ஈவதே உண்மையான ஈகை எனப்படும். “ஈதலே நன்று” [3] என்று இரண்டு குறட்பாக்களில் ஈதலுக்கான விளக்கத்தை அறியமுடிகிறது. இதே கருத்தைத் திருவிவிலியத்தில் இறைமகன் இயேசு கிறிஸ்து முன்வைத்துப் பேசுகிறார். ஈகை என்பது எத்தகையோருக்கு உரியது என்பதைக் குறிப்பிடுகிறார். “நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும்போது உம் நண்பர்களையோ சகோதர சகோதரிகளையோ உறவினர்களையோ செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும் மாறாக நீர் விருந்து அளிக்கும் போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும் அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர்.” [4] இங்கு யாருக்கு உண்மையான ஈதல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இதே கருத்தினை சிறுபஞ்சமூலம் நூலிலும் காணமுடிகிறது.

“புண் பட்டார் போற்றுவார் இல்லாதார் போகு உயிரார்
கண் கெட்டார் கால் இரண்டும் இல்லாதார் கண் கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கு ஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து” [5]

போரில் புண்பட்டவர், அனாதை, உயிருக்குப் போராடிக் கொண்டிருப்போர், பார்வை இல்லாதார், கால் இல்லாதார் ஆகியோருக்கு ஈவது சிறந்தது என அறியமுடிகிறது. மேலும் ஏலாதி நூலும் சிலரை முன்வைக்கிறது.

“தாய் இழந்த பிள்ளை தலை இழந்த பெண்டாட்டி
வாய் இழந்த வாழ்வினர் வாணிகம் போய் இழந்தார்
கைத்து ஊண் பொருள் இழந்தார் கண்ணிலவர்க்கு ஈய்ந்தார்
வைத்து வழங்கி வாழ்வார்” [6]

தாயை இழந்த குழந்தை, கணவனை இழந்த மனைவி, பேச்சு இழந்த ஊமை, முதலீடு இழந்த வணிகன், இருந்த செல்வம் இழந்தோன், கண் இல்லாத குருடன் ஆகியோருக்கு ஈய வேண்டும் இதன் வழி ஈவோரும் வாழ்வாங்கு வாழ்வார்கள் என அறியமுடிகிறது.

ஈதலை ஏற்றுக்கொண்டு மீண்டும் அவர்களால் திருப்பிக் கைம்மாறு செய்ய முடியாத உண்மையான வாழ்வின் விளிம்பு நிலையில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இத்தகையவர்களுக்கு ஈவதுதான் ஈதலுக்கே சிறப்பு என்பதை அறியமுடிகிறது.

இவ்வாறு ஈயும்போது “முகம் கோணாதே” [7] என்றும் பிறருக்கு உதவும்போது மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் ஈதல் வேண்டும் என்பதையும் அறியமுடிகிறது. “இரந்தவர் இன்முகம் காணும் அளவு” [8] இல்லை என்று வருவோருக்கு அவர்களின் வறுமை நீங்கி முகத்தில் மகிழ்ச்சி காணும் அளவுக்கு ஈவதே சிறந்த அறப்பண்பாகும். இவ்வாறு ஈயும்போதுதான் செல்வம் குறையாது என்றும் மேலும் அச்செல்வம் பெருகும் என்றும் காணமுடிகிறது. “கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.” [9] மேலும் “ஏழைகளுக்குக் கொடுப்பவருக்குக் குறைவு எதுவும் ஏற்படாது” [10] இத்தகைய கருத்தினையே கீழ்வரும் பாடலும் சுட்டிக்காட்டுகிறது.

“இரப்பவர்க்கு ஈயக் குறையபடுமென்று எண்ணிக்
குரைப்பவர் கண்டறியார் கொல்லோ? – பரப்பில்
துறைத் தோணி நின்று உலாம் தூங்கு நீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறும் கிணறு” [11]

இறைக்க இறைக்கக் கிணறு ஊறும். எனவே, ஈகையால் குறையும் என்று நினைத்துப் பொருளை மறைக்கலாமோ என்று பழமொழி நானூறு எடுத்துரைக்கிறது. தேவையில் இருப்போரை அறிந்து அவர்களுக்கு ஈயவேண்டும் என்பதைக் "கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள்" [12] என்று திருவிவிலியம் முன்வைத்துப் பேசுவதை அறியமுடிகிறது. இவ்வாறு மேலே குறிப்பிட்டவர்களுக்கெல்லாம் முகம் கோணாமல் ஈய வேண்டும் என்பதையும் மேலும் எதையெல்லாம் ஈதல் வேண்டும் என்பதையும் காணமுடிகிறது.

**எதை ஈதல் வேண்டும் அதன் அவசியம்**

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பதுபோல ஈதலைப்பற்றி குறிப்பிடுகையில் வள்ளுவர்,

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்" [13]

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைபிடிப்பதைக் காட்டிலும் பிறருக்கு உணவு கொடுத்தலே சிறந்தது என்பதை அறிவதோடு உணவு ஈவது நோன்பைவிட மேலானது என்ற கருத்து புலனாகிறது. இதே கருத்தைத் திருவிவிலியமும் குறிப்படுவதை அறியமுடிகிறது. "பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும் உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளாதிருப்பதும் அன்றோ நாம் விரும்பும் நோன்பு." [14] இச்செய்தியில் அடிப்படைத் தேவையில் உழல்வோருக்கு ஈதலே இறைவன் விரும்பும் நோன்பாகக் கருதப்படுகிறது. அதேபோல மேலே குறிப்பிட்ட குறளில் மனிதன் தமது வாழ்க்கையில் விரும்பிக் கடைபிடிக்கும் நோன்பாகக் கருதப்படுவது பிறருக்கு உணவு கொடுத்தலே ஆகும். விரும்புதல் யாராக இருந்தாலும் நோன்பு என்பது ஒன்றே என்பதை அறியமுடிகிறது.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" [15]

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களுக்குப் பசியென்னும் கொடிய நோய் அணுகாது. இங்கு நோய் என்பது பசியைக் குறிக்கிறது என்பதை அறியமுடிகிறது. "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" [16] என்ற திருவிவிலியச் செய்தியானது இருப்பவரைக் குறிக்கிறது. உணவு என்பது பசியைத் தீர்க்கிறது. உடை என்பது மானத்தைக் காக்கிறது என்பதை அறிவதோடு, இருப்போர் இல்லாதவர்க்கு ஈதலே சிறந்த குணமாக அறப்பண்பாகக் கருதப்படுகிறது. இத்தகைய ஈதல் குணமானது மரணத்தைவிட உயர்ந்து நிற்பதை வள்ளுவர் கீழ்க்காணும் குறளில் குறிப்பிடுகிறார்.

"சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" [17]

இறப்பைவிடத் துன்பம் தருவது வேறொன்றும் இல்லை. மற்றவருக்குக் கொடுக்காமல் வாழ்வதைவிட இறப்பதே மேலாகக் கருதப்படுகிறது. இல்லாத ஒருவன் வருந்திச் சாவதை வள்ளுவரால் பொறுக்க முடியாமல் கூறியிருப்பதைக் காணமுடிகிறது. ஈதலுக்கு விளம்பரம் செய்யாதீர்கள்

நடைமுறையில் ஈதல் என்ற குணம் அல்லது கொடை கொடுத்தல் என்பது விளம்பரப்படுத்தும் ஒரு நிகழ்வாக இருப்பதைக் காணமுடிகிறது. இதனைத் திருவிவிலியம் முற்றிலும் மறுக்கிறது. "மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள்."[18] "நீங்கள் தர்மம் செய்யும் போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர் மக்கள் புகழ வேண்டும் என்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர்" [19] இங்கு பிறருக்கு ஈவது மற்றவர்களுக்குத் தெரிய வேண்டாம் என்பதை இயேசு முன்வைக்கிறார். இன்று ஈவது என்பது ஒரு விளம்பரயுத்தியாக ஆகிவிட்டது.

தனிமனிதர்களும் தொண்டு நிறுவனங்களும் இயலாதவருக்கு ஈவதை பிரகடனப்படுத்தவே செய்கிறார்கள் என்பதை நாள்தோறும் வரும் பத்திரிகை செய்திகளும் காணொளி காட்சிகளும் காட்சிப்படுத்துகின்றன. குறிப்பாக பெரிய பெரிய டிஜிட்டல் பேனர்களில் (பதாகை) கொட்டை எழுத்துகளில் கொடையாளியர் பெயர் புகைப்படம் பொறிக்கப்படுவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

பொதுவாக வழிபாட்டு இடங்களில் கொடையளித்தவர்களின் பெயர்ப் பட்டியல் வாசிக்கப்படுவதையும் அவர்களின் பெயர்களைப் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. இறைவனுக்காகச் செய்யப்படும் நேர்த்திகளும் விழாக்களும் எடையிட்டு செலுத்தப்படும் காணிக்கைகளும் வீண் ஆடம்பரங்களாக மாறிவருவருகின்றன. வழிபாட்டுத்தலங்கள் என்றுகூட பார்க்காமல் சில திருடர்கள் சில நேரங்களில் களவாடுவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

இத்தகைய செயல்களை இறைவன் விரும்புவதில்லை என்றும் இந்த செயல் வேண்டாம் என்றும் திருவிவிலியம் குறிப்பிடுகிறது. "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாது இருக்கட்டும்" [20] என ஈதல் குணத்தை விளம்பரத்திற்காக இழிவுபடுத்த வேண்டாம் என்றும் திருவிவிலியம் வெளிப்படுத்துகிறது.

## ஈதலைத் தடுப்பது ஈனக்குணம்

ஈகை குணம் கொண்ட நல்லோர் சிலர் இல்லாதவருக்குக் கொடுப்பதைக் கண்டு பொறாமையால் பலர் ஏன் கொடுக்கிறீர்கள்? அவர்கள் நன்றாகத்தான் உள்ளனர் என்று ஈவதைத் தடுக்கும் ஈனக்குணம் படைத்தோரைப் பார்த்து வள்ளுவர் கொதித்து எழுகிறார்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூம் இன்றிக் கெடும்" [21]

மற்றவர்களுக்குக் கொடுப்பதைக் கண்டு கொடுக்கவிடாமல் தடுக்கின்றவர்களுக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் ஏன் சுற்றமும் இல்லாமல் துன்பப்படுவார்கள் என்று வள்ளுவர் எச்சரிக்கின்றார். கூடவே சாபமிடுகிறார். உணவின்றி வருந்துக என்று கூறியிருக்கலாம் அல்லது உடுக்க உடையின்றித் தவிப்பாயாக எனக் கடிந்திருக்கலாம். மாறாக உடுக்க உடையும் உண்ண உணவும் அற்றுப் போவாய் அல்லது இரண்டும் அற்றவனாய்த் துன்புறுவாய் என உரைத்திருக்கலாம். ஆனால் அவனை மட்டும் சபித்தல் போதாதென்று அவனுடைய உற்றார், உறவினர் அனைவருமே துன்புறட்டும் என்று கூறி அனைவருமே கெட்டு அழிந்து போகட்டும் என்கிறார். ஒருவர் கொடுப்பதைத் தடுப்பது எவ்வளவு கொடிய செயல் என அறியமுடிகிறது. இதே கருத்தினை ஆத்திசூடியில் ஔவை "ஈவது விலக்கேல்" [22] எனப் பிறர் கொடுப்பதைத் தடுக்காதீர் என்கிறார். சில சமூகத் தொண்டு நிறுவனங்கள் தானாக முன்வந்து கொடுப்பதைப் பெரும்பாலான கிராமப்புறங்களில் உள்ள மக்கள் இன்றளவும் தடுத்து வருகின்றனர். ஈதல் என்னும் அறப்பண்புக்கு எதிராக ஈவதைத் தடுக்கும் ஈனக்குணத்தை விட்டொழியுங்கள் என வள்ளுவர் கூறுவதை உணரமுடிகிறது.

## ஈதலுக்கு ஒப்புமை

ஈதல் என்னும் அறப்பண்புக்கும் அதன் தன்மைக்கும் பல்வேறு உதாரணங்களை ஒப்பிட்டு விளக்கமளிக்கலாம்.

"நடு ஊருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க
படு பனை அன்னர் பலர் நச்ச வாழ்வார்
குடி கொழுந்தக்கண்ணும் கொடுத்து உண்ணா
மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை" [23]

மக்கள் பலரும் விரும்பும் படியாக வாழ்பவர் ஊர் நடுவில், மேடையினால் சூழ்ந்துகொள்ளுதலை நன்கு பொருந்திய காய்த்துள்ள நுங்குகளை உடைய பெண் பனைக்கு நிகரானவர். செல்வச் செழிப்பால் வாழ்ந்தும் மற்றவர்க்குக் கொடுத்து உண்ணாத மக்கள் இடுகாட்டில் உள்ள காய் காய்க்க இயலாத ஆண் பனைக்கு நிகரானவர். இப்பாடலில் ஈகைக்குணம் கொண்டவரை ஊர் நடுவே இருக்கும் பெண் பனை மரத்திற்கும் ஈதல் குணம் இல்லாதவரை இடுகாட்டில் இருக்கும் ஆண் பனைக்கு ஒப்பிட்டுக் கூறுவதை அறியமுடிகிறது.

"செய்கை சிறந்து அனைத்தும் நீர் வரையவாம் நீர் மலர்" [24] நீரின் அளவைப் பொறுத்து நீரில் பூக்கும் மலர்கள் உயர்ந்து இருத்தல் போல கொடையாளிகளும் தம்மால் இயன்ற அளவு கொடுக்கும் குணம் உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதை அறிவதோடு. "வெள்ளத்து அனைய மலர்நீட்டம்" [25] என வள்ளுவர் குறிப்பிடுகிறார். நிலவின் இயல்பை ஈகைப் பண்புடன் ஒப்பிடுவதை அறியலாம்.

"கரப்பவர் நீர்மைத்தாய் நண்பகலில்
தோன்றல்
இரப்பவர்கண் தேய்வேபோல் தோன்றல்
இரப்பவர்க்கு ஒன்று,
ஈவார் முகம்போல் ஒளிவிடுதல்,-இம் மூன்றும்,
ஓவாதே திங்கட்கு உள" [26]

மறைந்து வாழ்பவர்களைப் போலப் பகலில் தோன்றலும் இரப்பவர்கள் போல் தேய்ந்து காணப்படுதலும் இரப்பவர்களுக்குக் கொடுப்பவர்கள் போல முகம் ஒளிர்தலும் ஆகிய இம்மூன்றும் நிலவுக்கு உள்ள இயல்புகள் என்று ஈதலுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. "நிரப்பு இடும்பை மிக்கார்க்கு உதவ ஒன்று ஈதல் சுரத்திடைப் பெய்த பெயல்" [27] மிகுந்த வறுமையில் வாடுபவர்க்கு ஒன்று ஈவது பாலை நிலத்தில் மழை பொழிந்தது போலக் கருதப்படுகிறது. பாலைநிலத்தில் உயிரினம் வாழ்வது என்பது கடினமானதாகக் கருதப்படுகிறது காரணம் மழையின்றி காணப்படும் நிலமாக உள்ளது. இப்படிப்பட்ட பாலைநிலத்தில் மழை பொழிதலை ஈதல் பண்புக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாக விளைந்தது. நான் என்ன செய்வேன்? இவ்வாறு விளைந்த பொருள்களைச்

சேர்த்துவைக்க இடமில்லையே? என வருத்தப்பட்டுப் பிறகு என்னுடைய களஞ்சியங்களையெல்லாம் இடித்து மேலும் பெரிதாகக் கட்டுவேன். அப்பொழுது தானியங்களையும் மற்ற பொருள்களையும் சேர்த்து வைப்பேன். என்நெஞ்சே உனக்குப் பல்லாண்டு காலத்திற்குத் தேவையானவற்றைச் சேர்த்து வைத்தது விட்டேன். நீ ஓய்வெடு உண்டு குடித்து மகிழ்ச்சியாக வாழ் என்று தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கொண்டான். அன்றிரவே இறைவன் அவனிடம், "அறிவிலியே இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்து விடும் அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும் என்று கேட்டார்" [28]
இதேபோல் பெரிய செல்வந்தன் ஒருவன் இறைமகன் இயேசுவிடம், போதகரே நான் நிலைவாழ்வு பெற வேண்டி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர் உன்னிடம் உள்ளதை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு என்றார். அதற்கு அவர் மனம் வருந்தியவராய் சென்றார். இதே கருத்தை வள்ளுவர்

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" [29]

என்ற குறளில் பதிவு செய்கிறார். பசித்தவரின் பசியைத் தீர்ப்பது வீண் போகாத செயல் ஆகும். தான் தேடிய பொருளைப் பிற்காலத்தில் சேமித்து வைக்கக்கூடிய கருவூலம் அல்லது சேமிக்கும் இடம் மனமே ஆகும். பசி தீர்த்தவரின் மனதுதான் செல்வத்தை சேமிக்கும் இடமாக இருத்தல் வேண்டும் என்பதை அறிமுடிகிறது.

"ஈயென இரத்தல் இழிந்தன்று, அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று" [30]

ஒருவரிடம் சென்று எனக்கு ஒன்றைத் தாருங்கள் என்று கேட்பது இழிவான செயல். அவ்வாறு கேட்டும் கூட ஈயமாட்டேன் என்பது அதனினும் இழிவானது. இவ்வரிகள் ஆயிரம் காலத்துப்பயிர் என்று கூறினால் மிகையாகாது. இவ்வரிகளில் ஒளிந்து இருப்பது மனிதனின் தன்மானம். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்மானத்தைக் கருதுவதால் கேட்பது என்பது இங்கு இழிவானதாகக் கருதப்படுகிறது. ஏதோ ஒரு சூழலில் ஒருவர் மற்றவரிடம் இரந்து கேட்பது இயல்பு. மற்றவரிடம் கேட்டும் இல்லை என்று கூறிவிட்டால் கேட்பவரால் தாங்கிக்கொள்ள இயலாது என்பதைப் பல நூற்றாண்டுக்கு முன்பே புறநானூறு இச்செய்தியைச் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

## மதிப்பீடு

1. ஈதலை ஏற்றுக்கொண்டு மீண்டும் அவர்களால் திருப்பிக் கைம்மாறு செய்ய முடியாத உண்மையான வாழ்வின் விளிம்பு நிலையில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு ஈவதுதான் ஈதலுக்கே சிறப்பு என்பதை அறியமுடிகிறது.
2. பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைபிடிப்பதைக் காட்டிலும் பிறருக்கு உணவு கொடுத்தலே சிறந்தது என்பதை அறிவதோடு உணவு ஈவது நோன்பைவிட மேலானது என்ற கருத்து புலனாகிறது.
3. நடைமுறையில் ஈதல் என்ற குணம் அல்லது கொடை கொடுத்தல் என்பது விளம்பரப்படுத்தும் ஒரு நிகழ்வாக இருப்பதைக் காணமுடிகிறது.
4. ஈதல் என்னும் அறப்பண்புக்கு எதிராக ஈவதைத் தடுக்கும் ஈனக்குணத்தை விட்டொழியுங்கள் என்பது அவசியமாகிறது.

## சான்றெண் விளக்கம்


1. க.ப. அறவாணண் (உ.ஆ), அற இலக்கியக் களஞ்சியம், ப. 479.
2. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.100.
3. மேலது, ப.100.
4. திருத்தூதர் லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.112.
5. க.ப. அறவாணண் (உ.ஆ), அற இலக்கியக் களஞ்சியம், ப. 479.
6. மேலது, ப. 500.
7. தோபித்து, பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.1161.
8. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.102.
9. திருத்தூதர் லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.95.
10. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.773.
11. க.ப. அறவாணண் (உ.ஆ), அற இலக்கியக் களஞ்சியம், ப. 493.
12. திருத்தூதர் மத்தேயு, மத்தேயு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.17.
13. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.102.
14. ஏசாயா, பழைய எற்பாடு, திருவிவிலியம், ப.872.
15. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.103.
16. திருத்தூதர் லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.89.
17. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.104.
18. திருத்தூதர் மத்தேயு, மத்ததேயு நற்செய்தி புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.11.

19. மேலது, ப.11.
20. மேலது, ப.11.
21. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை. ப. 80.
22. ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஆத்திசூடி, நீதி நூல்கள், ப. 24.
23. க.ப. அறவானண் (உ.ஆ), அற இலக்கியக் களஞ்சியம், ப. 482.
24. மேலது, ப. 494.
25. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 276.
26. க.ப. அறவானண் (உ.ஆ), அற இலக்கியக் களஞ்சியம், ப. 495.
27. மேலது, ப. 489.
28. திருத்தூதர் லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.108.
29. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.103.
30. வ.த. இராமசுப்பரமணியம், புறநானூறு, ப. 373.